Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Characterization (Thanmai Ani) in Vairamuthu's Songs

**C. Purnayokarani,** Research Student, Tamil Research Center, Sethupathi Government College of Arts, Ramanathapuram.
**ORCiD: https://orcid.org/0000-0002-0700-2020**
**DOI: 10.5281/zenodo.6622302**

## Abstract

*Film is one of the devices that has become intertwined with people's lives nowadays and it is easily accessible to people. Technology is one of the main reasons for the popularity of movie songs. At that time, there were only facilities for writing and voice. The purpose of this article is to establish how characterization has been employed in the songs of Vairamuthu in film songs.*

**Keywords:** Vairamuthu, Film, Thanmaiyani, Songs, Grammar.

## References

[1] *Tandiyalangaram* - Thirugnanasmbanthar
[2] Veerasooriyam - *Yappu*
[3] N. Pichchamoorthy - *Padaippilakiyam*

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# வைரமுத்துவின் திரையிசைப் பாடல்களில் வெளிப்படும் தன்மையணி

**க. பூர்ணயோகராணி**, ஆய்வு மாணவர், தமிழ் உயராய்வு மையம், சேதுபதி அரசு கலைக் கல்லூரி, இராமநாதபுரம்.

ORCiD: https://orcid.org/0000-0002-0700-2020

DOI: 10.5281/zenodo.6622302

**ஆய்வுச்சுருக்கம்**

*தற்காலத்தில் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து விட்ட சாதனங்களில் ஒன்று திரைப்படம் இவை மக்களிடம் எளிதாக சென்றடைகின்றன. மக்களால் அதிகமாகவும் விரும்பப்படுகின்றன.. திரைப்படப் பாடல்களின் இத்தகைய செல்வாக்கிற்கு தொழில்நுட்பம் மிக முக்கியக்காரணமாகும். அக்காலத்தில் ஏடு, குரல் என்ற வசதிகலே இருந்தன. திரைப்படப் பாடல்களில் இலக்கண ஆசிரியர்கள் விவரித்துள்ள அணிகளுக்குச் சான்றுகாட்ட முடியும் என்று நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கம் வைரமுத்துவின் திரையிசைப் பாடலில் தன்மையணியின் வகைகளான பொருள் தன்மை, குணத்தன்மை, சாதித்தன்மை, தொழில்தன்மை போன்றவை காணக்கிடைப்பதையும் இதனை ஆராய்ந்து விளக்குவதற்கு ஆய்வின் அணுகு முறையான பகுப்பாய்வு முறையும் பின்பற்றப்படுகிறது.*

**திறவுச்சொற்கள்:** வைரமுத்து, படம், தன்மையணி, தொழிற்நுட்பம், பாடல், இலக்கணம்

## முன்னுரை

காலந்தோறும் தனது வடிவத்தையும் உள்ளடக்கத்தையும் மாற்றிக்கொண்டே இருக்கிறது இலக்கியம். ஒரு படைப்பின் மூலம் படைப்புலகில் புதிய புரட்சியை மாற்றத்தை ஏற்படுத்தல் வேண்டும் என்னும் நோக்கம் படைப்பாளர்கள் வரையரையை வகுத்துக் கொண்டு அதனுள் தம் படைப்பினை நிலை நிறுத்தி கட்டமைத்துக் கொள்வர் ஒரு படைப்பாளன் தம் படைப்பினில் பல்வேறு கூறுகளைப் பிணைத்து கற்போர், படைப்பின் சுவையை முழுமையாக உள்வாங்கி அனுபவிக்கு பொருட்டு உருவாக்குவான். வைரமுத்துவின் திரையிசைப் பாடல்களில் தன்மையணி பயின்று வருவதை இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## தன்மையணி

உணர்ச்சியின் வெளிப்பாடே கவிதையாகும். மேலும் கற்பனையின் வெளிப்பாடே கவிதை என்று கூறுவர். உள்ளதை உள்ளப்படியே வருணித்து இயல்பாகக் கூறுவது தன்மையணி ஆகும். இதனை, தண்டியாசிரியர் ''தன்மை நவிற்சி அணி'' எனவும் கூறுவர். **"எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும் சொன்முறை கொடுப்பது தன்மையாகும்"**[1]

என்கிறார். கவிதைக்கு பொய் அழகுதான் என்றாலும் அனைத்தையும் பொய்யாகவும் கற்பனையாகவும் படைத்தளித்தால் சுவை நிலைத்து நிற்கும் என்று கூற இயலாது. இதனால் கவிதை மீது சலிப்பும் வெறுப்பும் ஏற்படக் கூடிய வாய்ப்பும் உண்டு. ஆகையால் தான் கவிஞர்கள் இயல்பாக உள்ளதை உள்ளவாறு அதன் இயற்கைத் தன்மை கெடாமல் அழகுறக் கூறுதலும் உண்டு. வீரசோழியம் தன்மையணியைத் தன்மை இயல்பு எனக் குறிப்பிடுவதோடு அதனை நான்காக வகைப்படுத்துகிறது. இதனை, "**தீர்ப்பியஞ்சாதி தொழில் குணமார் தன்மை பிறப்பி வொப்பா முருவமமாவது அன்றி உருவு**"[2]

எனக் கூறுகிறார்.

**தண்டியலங்காரத்தில் குறிப்பிடும் தன்மை அணிகளின் வகைமைகள்**

ஒரு பொருளின் பண்பு தொழில் முதலியவற்றை கற்பனை கலவாது உள்ளவாறு கூறும் அணி தன்மை நவிற்சியாம் இதனைச் "சுவபாவோகத்தி அலங்காரம்" என வடநூலார் கூறுகின்றனர். இதன் வகையை தண்டியாசிரியர். **"அதுவே பொருள் குணம் சாதி தொழிலொடு புலனாம்"**[3] எனக் கூறுகிறார். இது,

**1. பொருள்தன்மையணி,**

**2. குணத்தன்மையணி,**

**3.சாதித்தன்மையணி**

**4. தொழில் தன்மையணி** என நான்கு வகைப்படும்.

**வைரமுத்துவின் திரையிசைப் பாடல்களில் பொருள் தன்மையணி**

வைரமுத்துவின் திரையிசைப் பாடல்களில் சமுதாயச் செய்திகளைக் கூறும் பொழுது காதல் நிகழ்வை எடுத்துரைக்கும் பொழுது பொரும்பான்மையாகத் தன்மையணியே பயின்று வருவதைக் காண முடிகிறது. **"இலக்கியத்தில் கவிஞனின் புதிய பார்வை என்பது ஒரு படைப்பாளி தான் வாழுங்காலத்திற்கேற்ற கருத்துகளைக் கூறுவது ஆகும்"4** என்னும் நா.பிச்சமூர்த்தியின் கூற்று இக்கால மாணவர்களின் வாழ்வில் காணப்படும் இயல்பு நிலையைக் கவிஞர் உள்ளவாறு வெளிப்படுவதை,

**"கிண்டல் என்ன கேலி என்ன**
**நானும் ஒரு மாணவன் தான்**
**கல்லூரி வாழ்க்கையிலேயே**
**உங்களைப் போல ஆனவன்தான்**
**வகுப்பில் வெடியைக் கொளுத்திப் போட்டு**
**வம்பு வளத்தவன் தான் – அட**
**கடைசி பெஞ்சியில் ஒளிஞ்சு – காகித**
**அம்பு தொடுத்தவன் நான்" (வை.ஆ.பா.107)**

என்ற இப்பாடலில் கவிஞர் பயிலும் மாணவன் செய்யும் செயல்களை கற்பனையின்றி இயல்பாக விவரிக்கின்றார். இளம் வயதில் பயமறியாமல் கல்லூரிக்கு வரும் மாணவர்கள் ஆசிரியர்களைக் கேலி செய்வது, கோபத்தில் சண்டையிட்டுக் கொள்வது தான் செய்யும் தவற்றை ஒத்துக் கொள்ளாமல் பிறர்மீது பழிபோடுவது இவை எல்லாமே இயல்பு பொருந்திய காட்சிகள் இதனால் இப்பாடல் பொருள் தன்மையணி ஆயிற்று.

**வைரமுத்துப் பாடல்களில் குணத்தன்மையணி**

தொல்காப்பியர் குணத்தன்மை என்பது மெய்ப்பாடுகளின் மூலமே வெளிப்பட்டு நிற்கும் என்று கூறியுள்ளார். ஆனால் பல இடங்களில் குணத்தன்மை மெய்ப்பாட்டின் தன்மையின்றி தோற்றம் பெறும் என்பதை புத்தமித்திரனார். **"மனிதன் வாய்மையிற் றொழிலின் வருமெனக் குணத்தினைக் கிளப்பது குணத்தின் தன்மை"**[5] என்ற நூற்பாவின் வழி ஆசிரியர் குறிப்பிடுகிறார். இவ்வுலகில் வாழும் மனிதர்கள் பல குணங்களைக் கொண்டவர்கள். அவர்களைச் சூழ்நிலையில் மட்டுமே அடையாலம் கண்டு கொள்ள இயலும் என்பதனை,

**"நண்பர்களைத் துயத்தில்**

**கண்டு கொள்ளலாம்**
**நல்லவரை வறுமையிலே**
**கண்டு கொள்ளலாம்**
**வஞ்சகரை வார்த்தையிலே**
**கண்டுகொள்ளலாம்**
**மனைவியரை நோயினிலே**
**கண்டுகொள்ளலாம்" (வை.ஆ.பா.313)**

இப்பாடலில் கவிஞர் நமக்கு நன்மைகளையும், தீமைகளையும் எடுத்துக் கூறி நட்புடன் பழகும் நண்பர்களின் உண்மையான குணத்தினை நமக்கு துன்பம் வரும் காலத்தில் அறிந்து கொள்ளலாம். நல்லவரிண் குணத்தையும், வஞ்சகரின் குணத்தையும் தெரிந்து கொள்வதற்கும் சாரியான சூழல் வேண்டும். உடலால் இணைந்து இன்புற்று வாழும் மனைவியின் குணம் எத்தகையது என்பதனை நாம் நோயுற்ற துன்புறும் காலத்தில் புரிந்து கொள்ளமுடியும் என ஓவ்வொருவரின் குணத்தையும் சுட்டுவதால் இது குணத்தன்மை ஆயிற்று.

**கவிஞர் வைரமுத்துப் பாடல்களில் சாதித்தன்மை**

ஒரே தன்மையால் ஒத்திருக்கும் இனத்தின் பண்புகளை வெளிப்படுத்துவது சாதித்தன்மையணிஆகும். இதனை, **"இன்மை யிகழா தினத்திற் கொத்ததன்மையிட்டுரைப்பது சாதித்தன்மை"6** என்ற நூற்பாவின் தன்மையினால் ஒத்திருக்கும் பண்புகளைக் கூறுவதே சாதித்தன்மையணி என்கிறது வீரசோழியம்,

**"மூடிவைத்த காதல் இன்று**
**மோசம் போகுமா**
**மூடிவைத்த தாழம்பூவில்**
**வாசம் போகுமா" (வை.ஆ.பா.61)**

என்று தாழம் பூவின் மணத்தினையும் கூறுகிறார். தாழம் பூவை மூடிவைத்தாலும் அதன் வாசத்தை மறைக்கமுடியாது அதைப்போலத் தான் பெண்ணின் காதலும் என்ற கருத்தினை இப்பாடலில் விளக்குகிறார். இங்கு தாழம்பூவின் தன்மையை உள்ளவாறு எடுத்துரைப்பதால் இது சாதித்தன்மையாயிற்று அதே போல,

**"பூ நாகம் பூநாககம் படமெடுக்கும சாமி**
**பாத்துப் பறிக்கவே ஞானமிருக்கா**
**பூவும் உண்டு அதில் நாகம் உண்டு**
**போராடி வெல்கின்ற வீரம் உண்டு" (வை.ஆ.பா.482)**

என்ற பாடலில் பூக்களைப் பற்றி கூறினாலும் ஆப்புவினுள் புநாகம் இருக்கும் சூட்சமத்தை அறிந்து பூக்களைப் பறிக்க வேண்டும் அதற்கு மனிதனுக்கு அறிவுத்தன்மை வேண்டும் எனவும் கவிஞர் பாடுகிறார். இப்பாடலில் பூவின் தன்மையும், மனிதனின் தன்மையும் எடுத்துரைப்பதால் இது சாதித்தன்மையாயிற்று.

**வைரமுத்துப் பாடல்களில் தொழில் தன்மையணி**

தொழில் தன்மை அணி பற்றி வீரசோழியம்

**"பழுதில் செய்வினை பதந்தெறும் வருவது**

**தொழிலின் தன்மை என்பனார் புலவர்"7**

எனக்குறிப்பிடுகின்றது. கண்ணன் திருமாலின் அவதாரமாகப் போற்றப்படுபவன் காதல் பாடல்களில் கண்ணனைப் படிமமாக, உள்ளுரையாக பயன்படுத்தி உள்ளனர் கவிஞர்கள் காதலர்களின் பரிபாஷையாகவும் இப்பாத்திரம் கையாளப்படுகின்றது.

**"மண்ணைத் தின்று வளர்ந்தாயே**
**துள்ளிக் கொண்டு திரிந்தாயே**
**அனையின்றித் அலைந்தாயே**
**மோகனங்கள் பாடிக்கொண்டு**
**மோக வலை விரித்தாயே**
**சேலைகளைத் திருடி அன்று**
**செய்த லீலை பலகோடி**
**பொன்னான காவியங்கள்**
**போற்றிப் பாடும் காதல் கண்ணா" (வை.ஆ.பா.90)**

புராண இதிகாசங்கள் கண்ணனை அழியாதத் தொன்மாக படைத்துக்காட்டுகின்றன. கண்ணன் கருமேகத்தின் நிறத்தை ஒத்தவன், கன்னியர்களிடம் களவு நிகழ்த்துபவன், மண்ணைத் தின்றவன், பெண்களை வம்பு செய்து சினம்கொள்ளச் செய்பவன், ஆடைகளை திருடியவன், தங்கை திரௌபதிக்கு ஆடை கொடுத்து உதவிய உன்னதன், கீதை என்னும் புனித நூலைத் தந்தவன் என்றெல்லாம் கவிஞர் இப்பாடலில் விவரிப்பதையும் கண்ணனின் இயல்புகளை எடுத்துக்கூறியிருப்பதையும் தொழில் தன்மையணி பயின்று வந்துள்ளதை அறிந்துக் கொள்ளலாம் அதனால் இது தொழில் தன்மையணியாயிற்று.

**முடிவுரை**

கவிஞர் வைரமுத்துவின் திரையிசைப்பாடல்களில் பல்வேறு கருத்தியல் சிந்தனைகள் காணப்படுகின்றன. மாணவர்களுக்கு இலக்கண அறிவை ஊட்டவும், திரைப்படப்பாடல்கள் குறித்த தாழ்வெண்ணத்தைக் கல்விப் புலங்களிலிருந்து போக்கவும் இது போன்ற கட்டுரைகள் அவசியமாகின்றன.

**துணைநூற்பட்டியல்**

[1] *தண்டியலங்காரம்* – திருஞானசம்பந்தர்.
[2] *வீரசோழியம்* - யாப்பு.
[3] ந.பிச்சமூர்த்தி - *படைப்பிலக்கியம்*.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.